மனிதாபிமானக் கல்வி

மாற்று திறனாளிகளை ஒருங்கிணைத்து மறுவாழ்வு வாழச் செய்யும் குறிக்கோளை நிறைவேற்றி கொண்டு இருக்கிறோம். டாக்டர் S. சுமதி M.com, M.phil, Phd அவர்கள் அமர்சேவா சங்க செயற்குழு உறுப்பினர்



"மாற்றுத்திறனாளி" என்பவர் உடலிலோ அல்லது மனதிலோ ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அவரால் சில செயல்களை செய்ய முடியாமல் போய்விடுகிற காரணத்தினால் அவர்களை நாம் அவ்வாறு அழைக்கிறோம். எனவே "மாற்றுத்திறனாளிகள் தேவைகளை கருணை அடிப்படையில் பார்க்கக் கூடாது என்பதும் உரிமைகளின் அடிப்படை-யில்தான் பார்க்க வேண்டும் என்பதும் அவர்களுக்கு எதிரான பாரபட்சங்களுக்கு முடிவுகட்ட வேண்டும் என்பதும் ஐ.நாசாசன விதி"யை சமமாக்கி இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மாற்றுத் திறனாளிகள் கூடுதல் எண்ணிக்கையில் இருப்பதாக உலக சுகாதார நிறுவனமும் உலக வங்கியும் இணைந்து தயாரித்த முதல் உலக அறிக்கையை முன் நிறுத்தி நாட்டில் உள்ள கல்வி கற்றவர்கள்நிலையில்மிககுறைந்தமாற்றுத்திறனாளிகளே கற்றவர்களாக உள்ளனர். இதற்கு காரணம் **மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான அரசு பள்ளிகள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் போதிய அளவு இல்லாதது இவர்களின் கல்விக்கு தடையாக உள்ளது** என்பதை நிலை நிறுத்தி வேலையில்லாமல் அவதியுறும் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே வருகிறது என்பதையும் உள்ளடக்கிய சேவை கொள்கையை குறிக்கோளாக கொண்டு ஒவ்வொரு தனி மனிதனும் செயல்பட வேண்டும். இக்குறிக்கோளுடன் செயல்பட்டுக் கொண்டு இருக்கும் அமர் சேவா சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் டாக்டர் S. சுமதி அவர்களை கல்விடுடே மாத இதழுக்காக அணுகிய போது அவர்கள் கூறிய உணர்வு பூர்வமான அனுபவ வார்த்தைகளில் சில..

**டாக்டர் S. சுமதி அவர்களை பற்றிய ஓர் அறிமுகம்**

டாக்டா; S. சுமதி அவர்கள் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர். 1976ல் திருச்சி சீதாலெட்சுமி ராமசாமி பெண்கள் கல்லூரியில் வணிகவியல் துறை ஆரம்பித்து H.O.D யாக பணியாற்றியவர். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் அமர் சேவா சங்கத்தின் சேவை மீது தனக்கு இருந்த ஈர்ப்பின் காரணமாக 2003ல் தனது கல்லூரிப் பேராசிரியர் பணியில் விருப்ப ஓய்வு பெற்று கொண்டு அமர் சேவா சங்க செயற்குழு உறுப்பினராக நிறுவனர் திரு. ராமகிருஷ்ணன், செயலாளர் திரு. சங்கரராமன் ஆகியோருடன் தன்னையும் இணைத்து கொண்டார். மேலும் அவர் கூறும் போது பேராசிரியர் பணி எங்கு வேண்டுமானாலும் பார்க்கலாம். ஆனால் இளம் யுவர் மற்றும் யுவதி இவர்களுடன் ஒன்றி இருந்து இந்த மாதிரியான சூழ்நிலையில் சேவை பணி செய்வது மிகுந்த மன நிறைவைத் தருகிறது என்றார்.

1.அமர் சேவா சங்கம் குறிக்கோள்கள் என்னென்ன?

தனது இளம் வயதில் ஏற்பட்ட விபத்தால் முதுகுத்தண்டுவடம் பாதிப்புள்ளாகி கழுத்துக்கு கீழே செயலிழந்த நிலையில் ஏர்மார்ஷல் திரு. அமர்ஜித்சிங் சாஹால் அவர்களின் சிகிச்சையும், உதவியும் சேர்ந்த மகத்துவமான பணியால் ஈர்க்கப்பட்டார். இந்த



மகத்துவமான பணியே அவருக்கு தன்னம்பிக்கை அளித்தது. இயங்க வைக்கும் இயக்கம் (ஆளுமை) தன்னிடம் உள்ளதை அறிந்து தயக்கம் கொள்ளாமல் திரு. ஏர்மார்ஷல் திரு. அமர்ஜித்சிங் சாஹால் அவர்களின் அரும்பணியை நினைவு கூறும் விதமாகவும். சமுதாயத்தில் ஆங்காங்கே சிதறி வாழும் பல்வேறு வகையான மாற்றுத் திறனாளிகளை ஒருங்கிணைத்து, தன்னம்பிக்கை, சுய முயற்சி, கூடி வாழும் தன்மைகொண்ட ஒரு சிறப்பு மண்டலமாக தோற்றுவித்து, மறுவாழ்வு வாழச்செய்வதை குறிக்கோளாக கொண்டும் சர்வதேச மாற்றுத் திறனாளிகளின் ஆண்டான 1981 -ஆம் ஆண்டு திரு. S. இராமகிருஷ்ணன் அவர்களால் நிறுவப்பட்டது.

2. மக்களிடம் மாற்றுத் திறனாளிகளை பற்றிய விழிப்புணர்வு உள்ளதா?

இளம் பொறியியல் மாணவர் உடலால் பாதிக்கப்பட்டாலும் உள்ள உறுதியுடன் மாற்றுத் திறனாளிகளுக்கு ஆற்றும் பணி அனைவரையும் அதிசயக்க வைத்தது. இச்செய்தி அண்டை கிராமங்களில் பரவி ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. அரிமாசங்கம், சுழற் கேடய சங்கம் போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அமர் சேவா சங்க வளர்ச்சிக்கு துணைபுரிய ஆர்வம் காட்டின. இந்த எழுச்சியால் சென்னையில் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலி பயன்படுத்தும் C.A பட்டம் பெற்ற மாற்றுத்திறனாளி திரு. S. சங்கரராமன் அவர்கள் ஆயக்குடி அமர் சேவா சங்கசெயல்பாடுகளை பார்வையிட வந்தபோது மனம் நெகிழ்ந்து தனது பட்டயக் கணக்குப் பணிகளை துறந்து 1992-ல் இச்சேவா சங்கத்தின் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். தலைவர், செயலர் இருவரின் சிறந்த செயலாற்றுதலால் இந்நிறுவனம் அதிக வளர்ச்சி கண்டது. இவ்விருவரும் கூடி அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் பயன்பெறும் ஒரு சிறப்பு மண்டலப் பகுதியாக திகழச் செய்ததோடு மாற்றுத் திறனாளிகளின்

சரணாலயமாகவும் அமைத்து கடந்த 33 ஆண்டுகளாக அமர் சேவா சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றி வருகிறார்கள் என்றால் அது மிகையாகாது.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு பணி..

இல்லம் பற்றி :



மாற்றுத்திறன் கொண்ட ஏழைக் குழந்தைகளுக்காக ஒரு இல்லம் இயங்கி வருகிறது. மாற்றுத் திறன் படைத்த குழந்தைகள் மற்றும் யுவதிகள் அனைவரின் தேவைக்காக ஒரு பசு பரிபாலிப்பு பிரிவு ஒன்றும் உள்ளது; இங்குள்ள 27 பசுக்கள் மூலம் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளின் பால் பொருட்கள் தேவையை பூர்த்தி செய்து வருகிறோம். விருந்தினர்கள் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக விருந்தினர் விடுதியும், குழந்தைகளின் கலை நிகழ்ச்சிக்காக மேடை அரங்கம் KR கல்வி அறக்கட்டளை மற்றும் REC நிறுவனங்களால் முறையே வழங்கப்பட்டுள்ளது. 24 மணி நேர சேவையுடன் கூடிய வரவேற்பறையும் பராமரிக்கப்படுகிறது.

மருத்துவமறுவாழ்வுப் பணி பற்றி :

மூளை வளர்ச்சி குன்றிய சிறப்பு குழந்தைகளுக்கான பகல் நேர பராமரிப்பு நிலையத்தில் பயின்று வரும் 85 சிறப்பு குழந்தைகளுக்கு அன்றாடப் பணிகளை அவர்களே மேற்கொள்வதற்கான அடிப்படை எழுத்தறிவுக் கல்வியும் கொடுக்கப்படுகிறது. 0-5 வயதுடைய குழந்தைகளை ஆரம்ப நிலையியே கண்டறிந்து, பயிற்சிக்காக எடுத்து அவர்களின் பாதிப்பின் அளவை குறைப்பதற்காக பால்வாடி, ஆரம்ப மையங்களில் வைத்து திரையிடுதல் முகாம் (Screeing Camp) நடத்தப்பட்டு வருகிறது. பள்ளிக்கூடங்கள் , கல்லூரிகள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள், தேவையின் அடிப்படையில் வெளியிடங்களுக்குச் சென்று வருவதற்காக உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. மனவளர்ச்சி குறைந்த குழந்தைகள், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பல்வகை ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் புறஉலகச் சிந்தனை இல்லாத குழந்தைகளுக்கு அவர்களின் அடிப்படை மருத்துவ மறுவாழ்விற்காகவும், சிறப்பு பயிற்சிகளுக்காகவும், எதிர்கால பாதுகாப்பிற்காகவும் பெற்றோர் சங்கம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கூட்டமைப்பின் உதவியுடன் பெற்றோர் சங்கத்தின் மூலமாக மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளிகள் 9, Early Intervention Center (EIC) -1 மற்றும் Vocational training Center 1ம் செயல்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான நடை உபகரணங்கள் அனைத்தும் இச்சங்கத்திலேயே தயாரித்து தேவையானவர்களுக்கு இலவசமாக வழங்குவதோடு பழுது நீக்கம் செய்யப்பட்டும் வருகிறது. ஊட்டச்சத்துள்ள உணவு தங்கும் இடம், ஆண்டுக்கு இருமுறை (தீபாவளி, பொங்கல்) க்கு புதிய ஆடை மற்றும் 2செட் பள்ளிச்சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது.

**4. மருத்துவ பரிசோதனை மற்றும் இயல்முறை மருத்துவ கூடம் பற்றி :**

இங்கு அனைத்து உபகரணங்களுடன் கூடிய ஒரு நவீன இயல்முறை மருத்துவ பயிற்சி மருத்துவப் பராமரிப்பு கண்காணிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அறுவை சிகிச்சை செய்யும் மாற்றுத் திறனாளிகளை கண்டறிந்து உரிய கைதேர்ந்த மருத்துவர்கள் மூலம் சிறப்பு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு சிகிச்சைக்குப் பின் பராமரிக்கபடுகிறது. இயல்முறை பயிற்சி தேவைப்படும் சுற்றுவட்டார கிராமங்களுக்கு இதன் மூலம் இலவசமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**5. முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு நிலையம் குறித்து :**

இந்தியாவில் மிக அரிதாக இயங்கும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு நிலையம் ஒன்று 2008 ஆம் ஆண்டு முதல் இங்கு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதோடு தேவையான தரமான தொழிற் கல்வியும் வழங்கப்படுகிறது. தற்போது 16 பயனாளிகள் சிகிச்சை பெற்றும் வருகிறார்கள்.

**6. மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி மேம்பாட்டுப் பணிகள் என்னென்ன?**

அமர் மறுவாழ்வு அறிவியல் கல்வி நிறுவனம் 2012 ஆம் ஆண்டு முதல் Rehabilitation Council of India New Delhi, மூலம் அங்கீகாரம் பெற்றுசிறப்பாக நடைபெற்று வருகிறது. அமர் சேவாசங்கத்தில் மறுவாழ்வு சம்பந்தமான பாடங்கள் அமர் மறுவாழ்வு அறிவியல் கல்வி நிறுவனத்தின் (Amar Institute of Rehabilitaion Science) மூலம் சிறப்புப் படிப்புகளாக முழுநேரமாக கற்றுத் தரப்படுகிறது. DECSE (MR) Diploma in Early Childhood Special Education (MR) , DCBR – Diploma in Community Based Rehabilitation ,CCCG – Certificte Coure in care Giving, மேலும் Training & Development மத்திய அரசின் Hindi Coaching Training Dakshina Bharat Hindi Pracharsabha –TamilNadu, Trichy மூலம் நடைபெற்றுவருகிறது. உயர்தரமான நூலகத்துடன் ஒருங்கிணைந்த மழலையர் பள்ளியும், ஒரு உயர் நிலைப்பள்ளியும் இங்கு சிறப்பாக இயங்கி வருகிறது; இவற்றின் மூலம் 1000-த்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பயனடைந்து வருகிறார்கள். மாற்றுத் திறனாளியின் திறமை மற்றும் தகுதிக்கேற்ற உயர்கல்வியும் வழங்கி வருகிறது. உயர்கல்வி பெற வாய்ப்பாக சங்கத்தினுள்ளேயே இந்திராகாந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகமும், அழகப்பா பல்கலைக்கழக தொலைதூர கல்வி மையமும்

இயங்கி வருகிறது. இக்கல்வி மையங்களின் மூலம் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பிற கல்வி பயில்வோரும் பயனடைந்து வருகிறார்கள். இவற்றின் மூலம் சுற்றுவட்டார கிராமத்தில் 800 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இவர்களுக்கான கல்வியே இலவசமாக வழங்குகிறோம்.

**7. தொழில் நுட்பக் கல்வி எத்தனை வகையான பயிற்ச்சியாக வழங்கப்படுகிறது?**

18-30 இடைப்பட்ட வயதுள்ள யுவர் மற்றும் யுவதிகளின் திறமை மற்றும் வாழ்வாதாரம் உயர்வடைவதற்காக தொழிற்பயிற்சி வாய்ப்புகளும் 125 யுவர் மற்றும் யுவதிகள் தங்குவதற்கான தனித்தனி விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சி மற்றும்; மேம்பாட்டுத்துறையின் ஸ்ரீசத்ய சாய் கணினி பயிற்சி மையம் மூலமும், இந்திய அரசு புதுதில்லி சமுதாயவளர்ச்சி பாலிடெக்னிக் திட்டத்தின் கீழ் அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரி சிவகாசி மூலமும் பயிற்சிகள் நவீன தகவல் தொடர்பு பயிற்சி, தட்டச்சு பயிற்சி, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, காளான் வளர்ப்பு ,நோட்டுப் புத்தகம் தயாரிக்கும் நிலையம், தையல் பயிற்சி மற்றும் ஆடைகள் தயாரித்தல், கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் நிலையம், பட்டயக் கல்வி நுழைவுத் தேர்வு பயிற்சி வகுப்புகள், கைபேசி; பழுதுநீக்கும் பயிற்சி, வீட்டு உபயோக பொருட்கள் பழுதுநீக்கும் பயிற்சி, இருசக்கர வாகனம் பழுதுநீக்குதல், மாற்றுத் திறனாளிகளின் சிகிச்சை பராமரிப்பிற்காக Amar Institute of Rehabilitation Science மூலம் டிப்ளமோ மற்றும் சான்றிதழ் கல்வியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**8. கிராமம் சார்ந்த மறுவாழ்வு பணியில் எத்தனை மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுகின்றனர் ?**

சுற்று வட்டாரத்திலுள்ள 9 லட்சம் மக்கள் வசிக்கும் 800 கிராமங்களில் 15,000 மாற்றுத் திறனாளிகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கான சிகிச்சை, மறுவாழ்வு மற்றும் வாழ்வாதாரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன் சுய உதவிக் குழுக்கள் அமைத்து கண்காணிப்புடன் கூடிய வழிகாட்டுதலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாற்றுத்திறன் தன்மைகள் அதற்கான மூலக்காரணம், பராமரிப்பு போன்றவற்றை வீதி பிரச்சாரம் மற்றும் முகாம் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல். நோய் வருவதற்கான காரணத்தை ஆரம்பத்திலேயே கண்டறிதல், வராமல்தடுத்தல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றைப் பற்றி பாதிக்கப்பட்டவர்க்கும் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் எடுத்துரைத்தல். மாற்றுத் திறனாளிகளை ஒருகிணைந்தது சுய உதவிக்குழுக்கள் அமைத்து, அவர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சிகள் வழங்கி அதன் மூலம் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்தல். பேற்றோர்கள் பராமரிப்பு நிறுவனம் அமைத்துக் கொடுத்தல் மூலம் மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்களும் பயிற்சி கொடுக்க வசதி ஏற்படுத்துதல்.

**9. அரசுத் திட்டங்களை செயல்படுத்துதல் பற்றி.**

உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் புதுவாழ்வுத் திட்டம் போன்ற பணிகளை நெல்லை மற்றும் அண்டைய மாவட்டங்களில் அமர் சேவா சங்கம் கண்காணிக்கும் நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மூலம் ஏற்கனவே அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் உபகரணங்கள் மற்றும் உதவிகளோடு உபகார சம்பளம் பராமரிப்பு மானியம் சுகாதார காப்பீட்டுத் திட்டம் மற்றும் பாதுகாவலர் சான்றிதழ் ஆகியவைகளை உரியவர்களுக்குப் பெற்றுத் தரவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**10. அமர் மறுவாழ்வு மற்றும் கல்வி நிறுவனத்தின் சிறப்பு அம்சம்..**

சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகள் நட்புச் சூழலில் பழகவும், நடமாடவும் ஏற்ற கட்டமைப்பு நிலையை உருவாக்கிவருவது மனிதநேய சமுதாய சேவையின் சிறப்பு. கல்வி நிறுவனத்தின் சிறப்பாவது, ஆண், பெண் இருபாலர்க்கும் தனித்தனிவிடுதிகள் உண்டு, 100% வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும். சிறந்த நூலகவசதி, சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகிறது. இத்தகையச் சிறப்பான சமூக சேவைகளையும், கல்வி மற்றும் மருத்துவச் சேவைகளையும் பாராட்டி பல சாதனை விருதுகள் வந்த வண்ணம் இருக்கின்றன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**11. எதிர்காலத்திட்டங்கள்**

மாற்றுத் திறன் குழந்தைகள், யுவர், யுவதிகள் பணியாளர்களுக்கான பராமரிப்பு மற்றும் பொழுதுபோக்கு வசதியுடன் கூடிய சிறிய இல்லங்கள் தோற்றுவித்தல். ஜிம்னாஸியம் ஹைட்ரோதெரபி பாடப்பயிற்சி கூடம் பிரார்த்தனை கூடம் வளாகத்திற்குத் தேவையான நீர் ஆதாரத் தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் காற்றாலை **சூரிய சக்தி மூலம் மின் தேவையை** பூர்த்தி செய்தல். வளாகத்தினுள் வசதியான சாலை சுற்றுச்சுவர் ஆகியவை அமைத்தல். இப்படி பல திட்டங்கள்.

மேலும் தொடர்புக்கு:
அமர் மறுவாழ்வு அறிவியல்
கல்வி நிறுவனம்
அமர் சேவா சங்கம்
"சுலோச்சனா கார்டன்ஸ்" 7-4-
104 B, தென்காசி ரோடு,
ஆய்க்குடி -621 852.
போன்: 04633-249170,
249180, 249131,
8220317088.
தென்காசி அலுவலகம் : 7708715866
Email:trainingassa@gmail.com.

நேர்காணல் செய்தவர் : ஆ. ராஜபாண்டி தூத்துக்குடி